FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348090

1. District : Krishnagiri மாவட்டம் PS: V&AC காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 13/AC/2026 முத.அ. எண் Date: 25.09.2026 நாள்

2. (i) Act சட்டம்: The PC Act, 1988, as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a) and

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 12 r/w 7(a)

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 25.09.2026 நாள் முதல் Date to : before 15.40 hrs நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : 25.09.2026 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : 23.45 hrs. நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 20KM North.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : Sub-Registrar Office, Veppanapalli. முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. G. Sakthivel குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : S.V. Govindasamy, தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : Age-51 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : Indian நாட்டினம் (e) Passport No. : – வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : – வழங்கப்பட்ட நாள் Place of Issue : – வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : PA to SDRO தொழில் (g) Address : O/o the Special District Revenue Officer [L.A] State Highways, Krishnagiri. முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tmt. M. Navamani, Junior Assistant, Incharge Sub-Registrar, O/o the Sub-Registrar, Veppanapalli, Krishnagiri District, and 8 Others. [Separate sheet enclosed]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved : –
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: –
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted!

Separate Sheets enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26/09/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26/09/2026
01.30 Hrs.

Name: பெயர் .....S. Ravi.....
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
VAPC, Krishnagiri

கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்13/AC/2026 u/s 7(a) and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்.7-ன் தொடர்ச்சி.

வ.எண்.	தெரிந்த குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
1.	திருமதி.மு.நவமணி, வயது 54, க/பெ ராமன், இளநிலை உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேப்பனப்பள்ளி, கிருஷ்ணகிரி.
2.	திரு.M.பழனி, வயது-42, த/பெ முருகன், ஒப்பந்த பணியாளர் (கேமரா ஆப்ரேட்டர்), சார்பதிவாளர் அலுவலகம், வேப்பனப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
3.	திரு.R.ஆனந்தன், (38), த/பெ.ராஜப்பா, டாக்குமெண்ட் ரைட்டர் (ஸ்ரீதர்) அசிஸ்டென்ட், சிகரமானப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
4.	திரு.A.முஸ்டாக், (30), த/பெ.அப்துல் ஜலீல், டாக்குமெண்ட் ரைட்டர் (பத்மநாப ராஜு) அசிஸ்டென்ட், சிகரமானப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
5.	திரு.A.சிராஜுதீன், (38), த/பெ.அலிஜான், டாக்குமெண்ட் ரைட்டர் (ஸ்ரீதர்) அசிஸ்டென்ட், 3/1069, கவுண்டர் தெரு, வேப்பனப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
6.	திரு.K.முரளிதரன், (51), த/பெ.காளியப்பன், டாக்குமெண்ட் ரைட்டர் (ஸ்ரீதர்) அசிஸ்டென்ட், 8 வது கிராஸ், ஜக்கப்பன் நகர், கட்டிகானப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
7.	திரு.I.முபாரக், வயது-33, த/பெ இப்ராகீம், க.எண்.3/1336, நமாஸ்நகர், வேப்பனப்பள்ளி, கிருஷ்ணகிரி.
8.	திரு.P.பாலகிருஷ்ணன், வயது-35, த/பெ பால்ராஜ், க.எண்.1/150, சின்னகோடிப்பள்ளி, கோடிப்பள்ளி அஞ்சல், கிருஷ்ணகிரி.
9.	திரு.S.முகமதுஜாகீர், வயது-45, த/பெ ஹெக்இஸ்மாயில், பாலாஜி நகர், கிருஷ்ணகிரி.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/AC/2026 u/s 7 (a) and 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண். 12-ன் தொடர்ச்சி.

இன்று 25.09.2026-ம் தேதி இரவு சுமார் 23.45 மணிக்குக் காவல் ஆய்வாளராகிய நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, திரு.G.சக்திவேல், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.G.சக்திவேல், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் கிருஷ்ணகிரி, மாநில நெடுஞ்சாலைகள் துறை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) அலுவலகத்தில் நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை Roc.No. 1096/2026/A1, நாள்: 07.07.2026-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக என்னை நியமித்திருந்தார். எனக்கு கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எழுத்தர்களிடமிருந்தும், இடைதரகர்களிடமிருந்தும் மற்றும் பத்திர பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்தும் கையூட்டு பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினருடன் வேப்பனப்பள்ளி சார்பதிவாளர் அலுவலகம் வந்து, 15.40 மணிக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டேன். ஆய்வுக்குழுவினர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் நுழையும் போது, வராண்டாவில் அமர்ந்திருந்த நபர்களை அலுவலகத்தின் மத்திய அறைக்கு அழைத்து வந்து அமர வைக்கப்பட்டது. காவல் ஆய்வாளர் அவர்கள் அலுவலர்கள் யாரும் வெளியே செல்லாதவாறும், வெளியில் இருந்து அலுவலகத்திற்குள் யாரும் வராதவாறும் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. பின்னர், வேப்பனப்பள்ளி பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.மு.நவமணி என்பவரிடம் நானும், காவல் ஆய்வாளரும் எங்களை அறிமுகம் செய்து கொண்டு, வேப்பனப்பள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்திருக்கும் விவரத்தை தெரிவித்தேன். திருமதி.மு.நவமணி,

வேப்பனப்பள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 25.08.2018-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், பொறுப்பு சார்பதிவாளராக பணியில் இருந்த திரு.நேருஜீ என்பவர் விடுப்பில் சென்றுள்ள காரணத்தினால், தான் இன்று ஒருநாள் மட்டும் பொறுப்பு சார் பதிவாளராக செயல்படுவதாகவும் தெரிவித்தார். அவரிடம் நான் என்னையும், என்னுடன் வந்த காவல் ஆய்வாளர் மற்றும் காவலர் குழுவினரையும் அறிமுகம் செய்து வைத்து அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்த விபரம் தெரிவிக்கப்பட்டது. மேலும், அங்கு பத்திரப்பதிவிற்காக வந்திருந்த பொதுமக்களிடம் திடீர் தணிக்கை குறித்த விவரத்தினை கூறி அதற்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. பின்னர் அங்கு பணியிலிருந்த இதர பணியாளர்களை அவரவர் இருக்கையிலேயே அமர்ந்து பணிகளை கவனிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. பின்பு அங்கிருந்த பொதுமக்களிடம் பத்திரப் பதிவு வேலை முடித்தவர்களை வராண்டாவின் ஒரு ஓரமாக வரச்செய்து அவர்கள் ஆஜர்படுத்திய மணிபர்ஸ் மற்றும் கைப்பைகள் ஆகியவற்றில் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் சந்தேகத்திற்கிடமான பணமோ, வேறு ஆவணங்களோ கண்டறியப்படாததால் சோதனை மேற்கொள்ளப்பட்ட பொதுமக்கள் அலுவலகத்திலிருந்து வெளியில் அனுப்பிவைக்கப்பட்டனர். பின்பு, அலுவலகத்தின் உள் வராண்டாவில் அமர்ந்திருந்த சில நபர்களை அழைத்து விசாரணை செய்ததில் திரு.I.முபாரக், திரு.P.பாலகிருஷ்ணன் மற்றும் திரு.S.முகமதுஜாகீர் ஆகியோர் தனிநபர்கள் என்றும், இன்று வேப்பனப்பள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்ய வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அதில் திரு.I.முபாரக் என்ற தனிநபரிடம் சோதனை செய்ததில் அவர் தனது பேண்ட்டின் முன்பக்க பாக்கெட்டிலிருந்து கத்தையாக 500 ரூபாய் நோட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுகள் 16 (500X16=8000) எண்ணிக்கையில் மொத்தம் ரூபாய் 8,000/- இருந்தது. அதுகுறித்து அவரிடம் கேட்க தனது தங்கையின் நிலம் விற்பனை செய்ததாகவும், அவருடன் தான் வந்ததாகவும், தனது சொந்த செலவிற்காக எடுத்து வந்ததாக தெரிவித்தார். தனிநபரான முபாரக் கூறிய விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லாததாலும், இப்பணம் சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக இந்த நடவடிக்கையின்போது என்னால்

கைபற்றப்பட்டது. அதேபோல் அங்கிருந்த மற்றொரு நபரான திரு.P.பாலகிருஷ்ணன் என்ற தனிநபரிடம் சோதனை செய்ததில் அவர் தனது பேண்ட்டின் முன்பக்க பாக்கெட்டிலிருந்து கத்தையாக 500 ரூபாய் நோட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுகள் 152 (500X152=76000) எண்ணிக்கையிலும், 200 ரூபாய் தாள் ஒன்றும் (200X1=200) மொத்தம் ரூபாய் 76,200/- இருந்தது. அதுகுறித்து அவரிடம் கேட்க தனது தனது அம்மா பெயரில் நிலம் பத்திர பதிவு செய்ய வந்ததாகவும், நிலத்தின் உரிமையாளருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். ஆனால் அவர் அந்த பணத்தை தனது அம்மா பெயரில் நிலம் பத்திரபதிவு செய்வதற்காக சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக இந்த நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. அதேபோல் அங்கிருந்த மற்றொரு தனிநபரான திரு.S.முகமதுஜாகீர் என்ற தனிநபரிடம் சோதனை செய்ததில் அவர் தனது பேண்ட்டின் முன்பக்க பாக்கெட்டிலிருந்து கத்தையாக 500, 200 மற்றும் 100 ரூபாய் நோட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுகள் 26 (500X26=13000) எண்ணிக்கையிலும், 200 ரூபாய் நோட்டுகள் 16 (200X16=3200) எண்ணிக்கையிலும் மற்றும் 100 ரூபாய் நோட்டுகள் 4 (100X4=400) எண்ணிக்கையிலும், மொத்தம் ரூபாய் 16,600/-இருந்தது. அதுகுறித்து அவரிடம் கேட்க தனது சொந்தபணம் என்றும், தான் இன்று கிரையமாகும் தனது நண்பர் திரு.ஜேம்ஸ் என்பருக்கு சாட்சி கையெழுத்து போடுவதற்காக வந்ததாகவும் தெரிவித்தார். ஆனால் அவர் அந்த பணத்தை தனது நண்பரின் பெயரில் நடக்கும் பத்திரபதிவிற்காக சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக இந்த நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி வேப்பனப்பள்ளி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒப்பந்த பணியாளராக பணிபுரியும் திரு.M.பழனி என்பவரை சோதனை செய்ததில் அவர் தனது பேண்ட்டின் முன்பக்க பாக்கெட்டிலிருந்து 500 ரூபாய் நோட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுகள் 3 (500X3=1500) எண்ணிக்கையில் மொத்தம் ரூபாய் 1,500/- இருந்தது. அதுகுறித்து அவரிடம் கேட்க அவர் அமைதியாகவே நின்றுகொண்டிருந்தார். பின்னர் அவர் அது தனது சொந்த

பணம் என்று தெரிவித்தார். ஆனால் அவர் ஆவண எழுத்தர் மற்றும் பத்திரபதிவு செய்ய வந்திருக்கும் பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக இந்த நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி வேப்பனப்பள்ளி சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த 1) திரு.R.ஆனந்தன், 2) திரு.A.முஸ்டாக், 3) திரு.A.சிராஜுதீன் மற்றும் 4) திரு.K.முரளிதரன் ஆகியோர் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் உதவியாளராக வேலை செய்வதாகவும், தங்களது வாடிக்கையாளருக்கு பத்திரப் பதிவு செய்ய உதவிக்கு உடன் வந்ததாகவும் தெரிவித்தனர். அதில் திரு.R.ஆனந்தன் என்பவரிடம் சோதனை செய்ததில் அவரிடம் பணம் ரூ.4190/- (500X8=4000, 100X1=100, 50X1=50 20X2=40) இருந்தது. அதைப்பற்றி ஆனந்தனிடம் விசாரிக்க, அவர் அந்த பணம் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். ஆனால் அவர் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாலும் அவர் சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக இந்த நடவடிக்கையின்போது என்னால் கைபற்றப்பட்டது. அதேபோல் அங்கிருந்த மற்றொரு நபரான திரு.A.முஸ்டாக் என்பவரிடம் சோதனை செய்ததில் அவரிடம் பணம் ரூ.10,500/- (500X21=10500) இருந்தது. அதைப்பற்றி முஸ்டாக்கிடம் விசாரிக்க, அவர் அந்த பணம் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். ஆனால் அவர் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாலும் அவர் சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக இந்த நடவடிக்கையின்போது என்னால் கைபற்றப்பட்டது. அதேபோல் அங்கிருந்த மற்றொரு நபரான திரு.A.சிராஜுதீன் என்பவரிடம் சோதனை செய்ததில் அவரிடம் பணம் ரூ.5,200/- (500X10=5000, 200X1=200) இருந்தது. அதைப்பற்றி சிராஜுதீனிடம் விசாரிக்க, அவர் அந்த பணம் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். ஆனால் அவர் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாலும் அவர் சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக இந்த நடவடிக்கையின்போது என்னால் கைபற்றப்பட்டது. மேலும், அங்கிருந்த மற்றொரு நபரான திரு.K.முரளிதரன் என்பவரிடம்

சோதனை செய்ததில் அவரிடம் பணம் ரூ.10,000/- (500X20=10000) இருந்தது. அதைப்பற்றி முரளிதரனிடம் விசாரிக்க, அவர் அந்த பணம் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். ஆனால் அவர் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாலும் அவர் சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக இந்த நடவடிக்கையின்போது என்னால் கைபற்றப்பட்டது. பின்னர் பொறுப்பு சார் பதிவாளர் மு.நவமணி அவர்களை அழைத்துக்கொண்டு மேற்படி மத்திய அறையின் தெற்கு சுவருக்கு பின்புறம் உள்ள முதல் தளத்திற்கு செல்லும் படிகட்டிற்கு கீழே UPS மற்றும் பழைய காக்கி அட்டை பெட்டிகள் போட்டுவைக்கப்பட்டிருந்தன. அதில் புதிய கணினியின் பாகங்கள் இருந்த ஒரு காக்கிநிற அட்டை பெட்டியினை நகர்தியபோது, அதற்கு அடியில் 500 ரூபாய் நோட்டுகள் இரண்டு கட்டுகள் இருந்தது. அதனை எண்ணிப்பார்க்கையில், அதில் தலா ஒரு கட்டில் 500 ரூபாய் நோட்டுகள் 100 எண்ணிக்கையில் இரண்டு கட்டிலும் மொத்தம் ரூபாய் 1,00,000/- (500X200=1,00,000) (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) இருந்தது. அந்த பணம் குறித்து பொறுப்பு சார் பதிவாளர் திருமதி.மு.நவமணி அவர்களிடம் விசாரணை செய்ததில் அந்தபணம் அங்கு எவ்வாறு வந்தது என்று தனக்கு ஏதும் தெரியாது என தெரிவித்தார். மேலும் மேற்கண்ட தொகைக்கு எவரும் உரிமை கோரவில்லை. எனவே இப்பணம் வேப்பனப்பள்ளி சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக இந்த நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலகத்தின் தென்மேற்கு மூளையில் அமைந்துள்ள கணினி அறை மற்றும் அலுவலக முதல் தளத்தில் அமைந்துள்ள பழைய பதிவறைகளை பொறுப்பு சார் பதிவாளர் திருமதி.மு.நவமணி முன்னிலையில் சோதனை மேற்கொண்டதில் வழக்கு தொடர்பாக பணமோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ ஏதும் கைப்பற்றப்படவில்லை. பொறுப்பு சார் பதிவாளர் திருமதி.மு.நவமணி அவர்களிடம் இந்த ஆண்டிற்கான கொடிநாள் நிதி இலக்கு ஏதேனும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்று காவல் ஆய்வாளர் கேட்க, அதற்கு அவர் அவ்வாறு தனக்கு இலக்கு ஏதும் நிலுவை இல்லை என்று தெரிவித்தார். மேலும் அரசுக் கணக்கில் உள்ள இருப்புத் தொகை பற்றி அவரிடம் கேட்க, தற்போது சார் பதிவாளர் அலுவலகங்களில் எந்த தொகை செலுத்த வேண்டுமானாலும் அதை இணையவழியில் மட்டுமே

செலுத்தப்பட வேண்டும் என்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாக அரசு கணக்கில் செலுத்த வேண்டிய தொகைகள் எதுவும் வசூல் செய்யப்படுவதில்லை என்றும் தெரிவித்தார். இது சம்மந்தமாக 25.09.2026-ம் தேதியன்று 15.40 மணிக்கு தொடங்கி 22.00 மணி வரை ஒரு செயல்முறை நடவடிக்கையானது என்னால் தயார் செய்யப்பட்டது. அதன் நகல்களை பொறுப்பு சார் பதிவாளர் மு.நவமணி, ஒப்பந்த பணியாளர் திரு.M.பழனி, ஆவண எழுத்தர்களிடம் உதவியாளர்களாக பணிபுரியும் திரு.R.ஆனந்தன், திரு.A.முஸ்டாக், திரு.A.சிராஜுதீன் மற்றும் திரு.K.முரளிதரன் மற்றும் தனிநபர்களான திரு.I.முபாரக், திரு.P.பாலகிருஷ்ணன் மற்றும் திரு.S.முகமதுஜாகீர் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர், நான் தனிநபர்களான திரு.I.முபாரக், திரு.P.பாலகிருஷ்ணன் மற்றும் திரு.S.முகமதுஜாகீர் ஆகியோர்களுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இந்த திடீர் சோதனையின் போது வேப்பனப்பள்ளி சார்பதிவாளர் அலுவலக அலுவலர்கள், ஆவண எழுத்தர்களின் உதவியாளர்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.2,32,190/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு.I.முபாரக், திரு.P.பாலகிருஷ்ணன் மற்றும் திரு.S.முகமதுஜாகீர் ஆகியோர்களுடைய வாக்குமூலத்தை திடீர் ஆய்வின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையுடன் ஆஜர்படுத்துகிறேன். வேப்பனப்பள்ளி பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.மு.நவமணி மற்றும் ஒப்பந்த பணியாளர் திரு.M.பழனி, ஆவண எழுத்தர்களிடம் உதவியாளர்களாக பணிபுரியும் திரு.R.ஆனந்தன், திரு.A.முஸ்டாக், திரு.A.சிராஜுதீன் மற்றும் திரு.K.முரளிதரன் மற்றும் தனிநபர்களான திரு.I.முபாரக், திரு.P.பாலகிருஷ்ணன் மற்றும் திரு.S.முகமதுஜாகீர் ஆகியோர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம் திரு.G.சக்திவேல்).

மேற்கண்ட புகாரினைப் பெற்று, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, மேற்குச் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி, கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, குற்ற எண். 13/AC/2026 u/s 7(a) and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018-ன்படி இன்று 26.09.2026-ம் தேதி 00.30 மணிக்கு வழக்கு பதிவு செய்து, முதல்

தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை மாண்புமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களைச் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

25/09/2026

Inspector of Police
Vigilance Anti Corruption
Krishnagiri